**இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு**

## தேசிய இளைஞர் படையணி

# வெற்றிடங்கள்

**தேசிய இளைஞர் படையணியில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும் பதவிகள்**

**01. உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) (MM 1-1)**

**02 பெறுகை அதிகாரி (JM 1-1)**

**03. கணக்கியல் அதிகாரி (JM 1-1)**

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு உரித்தாகும்.

**ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும் பதவிகள்**

**04. போதனாசிரியர் (பயிற்சி-Drill)**

ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும் பதவிகள்

இந்தப் பதவிக்காக ஆட்சேர்க்கப்படுவதானது 03 வருட கால ஒப்பந்த அடிப்படையிலாகும்.

**இந்தப் பதவிக்காக விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரர்களும்,**

அ. இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.

ஆ. பதவிக்காக ஒப்படைக்கப்படும் கடமைகளை வெவ்வனே நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள ரீதியான தகுதியுடையவராகவிருத்தல் வேண்டும்.

இ. சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

### 01. உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) (MM 1-1) - தலைமையகம்

**கல்வித் தகைமைகள்: வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

1. வியாபார நிர்வாக இளமாணி (விசேடம்), வியாபார மனித வள முகாமைத்துவ இளமாணி, முகாமைத்துவ விஞ்ஞான இளமாணி (அரசு) விசேடம், வர்ததக இளமாணி (விசேடம்), மனித வள முகாமைத்துவ விஞ்ஞான இளமாணி (விசேடம்), வியாபார முகாமைத்துவ இளமாணி (மனித வளங்கள்) விசேடம், விஞ்ஞான இளமாணி (வியாபார முகாமைத்துவம்) விசேடம், சட்ட இளமாணி, தொழிலாளர் கல்வி இளமாணி, முகாமைத்துவ விஞ்ஞான இளமாணி (அரச), வர்த்தக இளமாணி (பொது) எனும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

   **மற்றும்**

   பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவி தொடர்பான விடயத்துறையில் குறைந்தபட்சம் இரண்டு (02) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியில் தொடர்புடைய விடயத்துறையின் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது :** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**சம்பள குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு :**

MM 1-1- ரூபா 91,690 – 10x2,480 – 15x3,450 = 168,240.00

இதற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

எவ்வாறாயினும், 2027-01-01ஆம் திகதி வரை சம்பளம் வழங்குதல் 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

### 02. பெறுகை அதிகாரி (JM 1-1) - தலைமையகம்

**கல்வித் தகைமைகள்** : வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் முகாமைத்துவம் அல்லது வர்த்தக இளமாணி பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

   **மற்றும்**

   பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவியுடன் தொடர்புடைய விடயத்துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
2. பதவியுடன் தொடர்புடைய விடயத்துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

   **மற்றும்**

   தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவியுடன் தொடர்புடைய விடயத்துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. முகாமைத்துவ உதவியாளர் - (தொழில்நுட்பம் அல்லாத) (MA 1-1) சேவை வகுதியில் IIஆம் தரத்தில் தொடர்புடைய விடயத்துறையின் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது :** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**சம்பள குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு :**

JM 1-1- ரூபா 72,650 – 10x1,360 – 18x2,040 = 122,970.00

இதற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

எவ்வாறாயினும், 2027-01-01ஆம் திகதி வரை சம்பளம் வழங்குதல் 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

### 03. கணக்கியல் அதிகாரி (JM 1-1) - தலைமையகம்

**கல்வித் தகைமைகள் :** வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2 அல்லது 3)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் வர்த்தகம், கணக்கியல், வியாபார நிர்வாகம், நிதி, வியாபார முகாமைத்துவ பட்டமொன்றைப் பெற்றிருத்தல்
2. கணக்கியல் விடயத்துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்
3. உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாவில் சித்தியடைந்திருத்தல் (HNDA)

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகளில் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
2. முகாமைத்துவ உதவியாளர் - (தொழில்நுட்பம் அல்லாத) (MA 1-1) சேவை வகுதியில் IIஆம் தரத்தில் தொடர்புடைய விடயத்துறையின் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது :** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**சம்பள குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு :**

JM 1-1- ரூபா 72,650 – 10x1,360 – 18x2,040 = 122,970.00

இதற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

எவ்வாறாயினும், 2027-01-01ஆம் திகதி வரை சம்பளம் வழங்குதல் 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

### 04. போதனாசிரியர் (பயிற்சி-Drill) - ஒப்பந்த அடிப்படையில்

**தகைமைகள்**

1. 8ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல்
2. முப்படையில் சிரேஷ்ட, ஆணையிடப்படாத பதவிக்குக் குறையாத பதவியொன்றை வகித்திருத்தல்
3. இராணுவ பயிற்சி (Drill) பயிற்றுவிப்பாளர் பாடநெறியை வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும் அல்லது இராணுவம், விமானப்படை அல்லது கடற்படையில் மேற்கத்திய இசைக்குழுவில் உறுப்பினராக இருந்திருக்க வேண்டும்.

**வயது :** 50 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

**சம்பளத் திட்டம் :** 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் 40,403.00 ரூபா மாதாந்தக் கொடுப்பனவு 2025ஆம் வருடத்தில் உரித்தாகும் என்பதுடன் இந்த மாதாந்தக் கொடுப்பனவு 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையின் பிரகாரம் 2027-01-01ஆம் திகதி வரை வருடாந்தம் திருத்தப்படும். இதற்குப் புறம்பாக வாழ்க்கைச் செலவுப் படி உரித்தாகும் என்பதுடன் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு உரித்தாகும் வாழ்க்கைச் செலவுப் படியின் ஓய்வூதியத்துடன் வழங்கப்படும் அளவைத் தவிர மிகுதி மட்டும் வழங்கப்படும்.

**விசேடக் குறிப்பு**

1. www.youthcorps.lk இணையதளத்தில் உள்ள மாதிரியின் பிரகாரம் தயாரித்துக்கொண்ட விண்ணப்பப் படிவத்தை இரண்டு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் பெயர் மற்றும் முகவரி மற்றும் விசாரிக்கும் விபரங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் பிறப்பத்தாட்சிப் பத்திரம், ஏனைய தொடர்புடைய கல்வி மற்றும் தொழில் தகைமைச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ்களின் பிரதிகளை தம்மால் சான்றுபடுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.
3. ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதானால் சகல பதவிகளுக்கும் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
4. விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்களை 2026-02-09ஆம் திகதிக்கு முன் பணிப்பாளர், தேசிய இளைஞர் படையணி, இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்பப்படல் வேண்டும்.
5. தபாலில் காணாமல் போகும் அல்லது தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தொடர்பில் தேசிய இளைஞர் படையணி பொறுப்பு கூறாது.
6. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளுக்குப் பின்னர் இந்த நிறுவனத்திற்குக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பணிப்பாளர்,**
**தேசிய இளைஞர் படையணி.**
**2026-01-26.**